அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 8 நெறி 2 தமிழ் மாத இதழ் விலை ₹1 செப்டம்பர் 2017

திருக்காப்பிட்டுக் கொண்ட அறை - சித்திவளாகம்



பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!

## அக்டோபர் 5 -ம் திருநாள்
## ஆன்மநேய ஒருமைப்பாட்டு தினம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!




## தலை வணங்குகிறோம்

ஈரோடு திருஅருட்பா ஆராய்ச்சி மையத்தின் நிறுவனரும், அறிவியல் வித்தகருமான **ஈரோடு கதிர்வேல் திருமதி அமுதா கதிர்வேல்** தம்பதியினரை வாயார வாழ்த்தி வணங்குகின்றோம்.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10–ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவிற்கு வருகை தந்த வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர், திரைப்பட நடிகருமான உயர்திரு. **வாகை சந்திரசேகர்** அவர்கள்.


## “ தீபநெறி ” ஆசிரியர் குழு



**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**இர. கங்கை மணிமாறன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கங்காதரபுரம், மயிலாடுதுறை.
கைபேசி : 94434 08824



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 89393 76652

# 05.10.2017 ஆன்மநேய ஒருமைப்பாட்டு தினம்

'எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப, விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும்.' இது இறைவனுக்கு வள்ளலார் விடுத்த விண்ணப்பம்.

விண்ணப்பம் என்பது பணிவான வேண்டுகோள். எனவே "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்ற ஒரு குறிக்கோளை மட்டுமே செயலாக்க முனைந்த வள்ளலார், இந்த அப்பட்டமான உண்மையை, எவரும் எழுதத் துணியாததை எழுதுகிறார். மனித உயிர்கள் எதனாலெல்லாம் துன்புறுகின்றன என்று பார்த்தால் பசி, பட்டினி, நோய், அறியாமை, பஞ்சம், வெள்ளம், இயற்கையின் சீற்றம், கொடுங்கோலாட்சி, நாடுகட்கிடையிலான போர், கொலை, கொள்ளை. ஏமாற்றம். அற்ப சுகத்துக்கு அடிமையாதல் போன்றவை நமக்குத் தெரிகின்ற காரணங்கள். ஆனால் வள்ளலார் இவைகள் எதுவுமே முதற் காரணமல்ல. சமய, மத, மார்க்க, வருணாசிரமங்களை ஆணித்தரமாக்க முனைந்த உலகாசார சங்கற்ப விகற்பங்களே முக்கிய தடையென்கிறாரே! இதை எப்படி ஏற்பது?

வருணம் (வர்ணம்) என்பது அறவோர், அரசர், வணிகர், வேளாளர் என மனித இனம் நான்காக பிரிக்கப்பட்டது. (பிற மதங்களிலும் இதற்கு இணையான பெயரில் பிரிக்கப்பட்டிருக்கிறது). ஆசிரமம் என்பது குருமார்களின் இருப்பிடம், அவர்களின் வழிகாட்டுதலில் நடத்தப்படுதல். ஆசாரம் என்பது – அனுட்டானம். ஒழுக்கம், நெறி, சங்கற்பம் என்பது – மனோ நிச்சயம். நியமம், எண்ணம், மனோ கற்பனை. விகற்பம் என்பது வேற்றுமை, தவறு, ஐயம், வித்தியாசப்படுத்துதல்.

மனித இனம் நால்வகை வருணமாக உலகர்களால்தான் (பிரிக்கப்பட்டது) விகற்பமானது. இது நம்மைப் படைத்த இறைவனுக்கு ஏற்புடையதல்ல. எனவேதான் இன்றைய உலக சமாதானத்திற்கு ஊறு செய்ய இது காரணமாகிவிட்டது. இறைவன் படைப்பில் கூட உடலிலுள்ள கால்கள் ஓடியாடி உழைத்து மனித இனத்திற்கு உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைத் தர உறுதுணை நிற்கிறது. (இது வேளாண்மை). வயிற்றுப் பகுதி உடலுக்குத் தேவையான உணவை (வாய் வழியாக) கொள்முதல் செய்து ஜீரண உறுப்புகள் மூலம் உதரமாக்கி உடல் முழுவதற்கும் விநியோகம் செய்கிறது. (இது வணிகம்). மார்புப் பகுதயில் உள்ள இருதயம், நுரையீரல், இரத்தத்திலுள்ள அழுக்கை நீக்கி (சமுதாயத்தில் குற்றம் நீக்குதல் போல) சுத்தப்படுத்தி உடலில் பரவச் செய்வதுடன, உடலைக் காப்பாற்ற கைகள், எதிரிகளுடன் போரிட அக்காலத்தில் வில்லேந்தவும், இக்காலத்தில் துப்பாக்கி தொங்கவிடவும் தோள்களையும் கொண்டுள்ளது. (அரசர்). கழுத்திற்கு மேலுள்ள பகுதியால் இங்கே உணவு இருக்கிறது அங்கே எதிரி வருகிறான் போன்றவற்றைக் காண கண்கள், பிறரை அழைக்க, கல்வி கற்க, உரையாட, அறவை வளர்க்க வாயும், செவியும், உறுதுணையாய் நிற்கும். நன்மை, தீமையறிய, அனுபவத்தை சேமிக்க மூளை உண்டு (அறவோர்), இந்த நான்கையும் தனித்தனியாகப் பிரித்து ஒன்றையொன்று தொடாமல் விகற்பமானால் உடலில் உயிர் தரிக்காது. பறந்துவிடும். காலுக்குப் பாய்ந்த உதரம் (இரத்தம்) அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் தலைக்கும் பாய்கிறதே! இதில் எப்படி பேதம் இல்லையோ அதே நிலையை நாம் இதுவரை வருணாசிரமத்தில் நடைமுறைப்படுத்தவில்லை. எல்லா மனிதர்களிடமும் அவர்களை வழிநடத்தும் குருமார்கள் இந்த சாதி மத உட்பிரிவுகளைக் காட்டியே தத்தம் ஆசிரமங்களை தக்கவைத்துக் கொள்கின்றனர். எல்லா மகான்களும் "அன்பாயிரு" என்பதை அடிப்படையாகக் கொண்டே மதங்களை உருவாக்கினர். ஆனால் வழிநடத்துபவர்கள் அதை விகற்பமாக்கிவிட்டனர்.

உலகத்தையும் அதிலுள்ள சுகங்களையும், உன் சந்ததி மற்றும் சுற்றத்தவர் மட்டுமே அனுபவிக்க

**புறநடு அதனால் புறப்புற நடுவை**
**அறம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (534)**

வேண்டும். மற்றவர்கள் கூட அதை இப்போது அனுபவிக்கிறார்கள். அவர்களை ஓரங்கட்டு. ஒதுக்கிடு அல்லது ஒழித்திடு என்பதுதான் இன்றைய வரையில் மனிதனுக்கு வழிகாட்டும் மந்திரமாயிருக்கிறது. சமயவாத போரில் நாலாயிரம் சமணர்கள் கழு ஏற்றப்பட்டனர். பசி, பட்டினி, இயற்கை சீற்றத்தால் மரணமுற்றவர்களின் எண்ணிக்கையை விட சாதிமத வேறுபாடுகளால் அழிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். ஆறு லட்சம் யூதர்களைக் ஹிட்லர் கொன்றதை சரித்திரம் சொல்கிறது. நான்கு லட்சத்திற்கும் மேலான மஞ்சள் இனத்தவரை ஹிரோஷிமா, நாகசாகியில் அடுத்தடுத்த நாளில் அணுகுண்டைப் போட்டு அழித்தது வெள்ளையினத்தினர். பலநாடுகளில் மெத்தப்படித்தவர்கள் ஆட்சி செய்தாலும் இந்த நிலை மாறவேயில்லை.

இதற்கு ஒரு முடிவு காண 24.10.1945-ல் ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organisation – UNO) தோற்றுவிக்கப்பட்டது, அதன் தலைமைப் பொறுப்பில் வெள்ளை. கருப்பு. மஞ்சள் நிறதத்தவர் இருந்தனர், இருக்கின்றனர். ஆனாலும் இன்றைய தேதியில் கூட இராக் - இரான் போர், இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர், வடகொரியா- தென்கொரியா போர், சிரியா - அமெரிக்க போர் பல நாடுகளில் உள்நாட்டில் வாழும் வேறு வேறு சாதி மதத்தவரிடையே போர். இவைகளெல்லாம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனவே தவிர குறைந்தபாடில்லை. ஐ.நா. சபையால் இரும்புக்கரம் கொண்டு அடக்கவோ, பிற நாடுகளின் மூலம் நெருக்கடியைக் கொடுத்தோ போரை முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை. அதன் அதிகாரம் அறுதியிடப்பட்டுள்ளது. எனவே வேறுவிதமாக UNO, UNESCO, WHO, போன்ற அமைப்புகளுடன சேர்ந்து மனித இனத்திற்கு தொண்டு செய்ய அல்லது அதை மகிழ்விக்க முனைந்தது. உதாரணமாக புகையிலை மறுப்பு தினம். தற்கொலை தடுப்பு தினம் போன்றவற்றை ஆண்டிலுள்ள 365 நாட்களில் ஏதாவது ஒரு நாளில் பிரகடனம் செய்கிறது. Valentine day, Father's day, Senior Citizens day போன்றவைகள் எதை பெரிதாக சாதிக்கப் போகிறது? ஏற்கனவே தனிமனிதர்கள் இவைகளை கொண்டாடிக் கொண்டுதான் இருக்கின்றனர். ஒட்டுமொத்த மனிதஇனம் (எல்லா உயிர்களும்) இன்புற்று வாழ ஒரே வழி மனிதரிடையே ஆன்மநேயத்தை விதைத்து வளர்ப்பதுதான். எல்லாம் அதில் அடங்கிவடும். உதாரணமாக, புகைபிடிப்பவரிடம் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ அறிவுறுத்தப்படும் போது அதில் புகை பிடிக்கும் அந்த உயிரும் சேர்ந்துதான் அப்போது அவரும் அவரின் உயிரை நேசித்து அதை தன் உடலில் இருந்து பறந்துவிடாமல் நிறுத்தி உடலுடன் நீண்டகாலம் உறவாட வைக்கமுடியும். பிறகு பிற ஆன்மாக்களையும் நேசிக்கும் எண்ணமும் உருவாகி அதுவும் என்னைப் போன்றது தானே என்ற எண்ணத்தை விதைத்து வளர்க்க "ஆன்மநேய ஒருமைப்பாட்டுதினம்" "UNIVERSAL BROTHERHOOD AND COMPRESSION DAY" என்பதை பிரகடனம் செய்ய வேண்டும். அதை எந்த நாளில் செய்யலாம்?

திருவருட்பிரகாச வள்ளலாரெனும் இராமலிங்கப் பெருமானார் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ தடையாயிருப்பது சாதி, சமயத்தினால் ஏற்பட்ட விகற்பத்தால்தான் - இது எங்கள் மனதில் பற்றக்கூடாது என்ற ஒன்றை மட்டுமே விண்ணப்பித்து கேட்டாரே (உணவு, உடை, இறந்த பின்பு சொர்க்கம் கொடு போன்றவற்றை கேட்கவில்லையே) அவரின் பிறந்த நாள் **அக்டோபர் 5** அந்த நாளே ஆன்மநேய ஒருமைப்பாட்டு நாள். அதில் இன்னொரு விளக்கத்தையும் உலகர் பெறுவர். உலகில் இதுவரை வாழ்ந்த எல்லோருக்கும் பிறந்த நாள், மறைந்த நாள், என இரண்டு நாள் வரும். ஆனால் வள்ளலாருக்கு பிறந்த நாள் மட்டுமே வரும். இன்னொரு நாள் எப்போதும் வராது. இதை அப்போதைய தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் G.H. கார்ஸ்ட்டின் தெளிவாக கெசட்டில் பதிவு செய்திருக்கிறார். St. Ramalingam Disappeared from this small room of Mettukuppamand proved his claim of deathlessness. எனவே எதிர் வரும் அக்டோபர் ஐந்து முதல் ஆண்டுதோறும் இது "ஆன்ம நேய ஒருமைப்பாட்டு தினமாக" அழைக்கப்படவேண்டும். UNO-வும் இதற்கு ஆவன செய்யட்டும். Let all Humans hail "UNIVERSAL BROTHERHOOD AND COMPRESSION DAY".

K.N. உமாபதி
K.K. நகர் - 95518 49757

**புகல் அரும் அகண்ட பூரண நடுவால்**
**அகநடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி (536)**

# ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழா








சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவின் கொல்லாமை வலியுறுத்தி ஆன்மநேய பேரணியை தொடங்கி வைக்கும் அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் நிறுவனர் தயவு தனலட்சுமி அம்மா. பேரணியில் திரளாக பங்கேற்ற ஆன்மநேய சொந்தங்கள்.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவின் அதிகாலை 4மணியளவில் நாகப்பட்டிணம் அருட்பெருஞ்ஜோதி அகல் விளக்கு மன்றத்தினரால் நடந்த அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்

**புறப்புறக் கடைமுதல் புணர்ப்பால் புறப்புறம்**
**அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (53)**

# அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அற்புதம்!

10.09.2017 ஆம் தேதி தீபம் அறக்கட்டளையின் சார்பாக 10ஆம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெரு விழா காலையில் இருந்து இரவு 10 மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த பெருவிழாவில் ஈரோடு கதிர்வேல் ஆகிய எனக்கும் வாய்ப்பு கொடுத்து, "மரணம் இல்லாப் பெருவாழ்வு" என்னும் தலைப்பில் பேச வைத்தார்கள். அது மகிழ்ச்சியாக இருந்தாலும் அவை அவ்வளவு பெருமையாக எனக்குத் தோன்றவில்லை. அவற்றை விட பெருமையாக ஆச்சரியமாக சிலவற்றை கண்டேன்.

காலை 9.30 மணிக்கு தீபம் அறக்கட்டளை இல்லத்தின் உள்ளே சென்றேன். கண்கொள்ளா காட்சியைக் கண்டேன். தீப அறக்கட்டளையின் சேவதாரிகள் ஆண்களும், பெண்களும் இன்முகத்தோடு வரவேற்றார்கள். அப்போது தீபம் அறக்கட்டளையின் நிர்வாகி திரு பாலகிருஷ்ணன் அய்யா இல்லை, தீப அறக்கட்டளையின் செயல் வீரர் சதுரகிரியார் அய்யா இல்லை. வெளியில் முக்கியமான வேலைகளை கவனிக்க சென்று இருந்தார்கள் போல.

அங்கே சுமார் 50க்கும் மேல்பட்ட சேவதாரிகள் ஆண்களும், பெண்களும் ஜீவகாருண்ய பணியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டு இருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது, அவர்களிடம் உரையாடினேன். உங்களுக்கு சோர்வு, களைப்பு உண்டாகிறதா என்று கேட்டேன். இல்லை அய்யா மூன்று நாட்களாக தூங்காமல் வேலை செய்கிறோம். பாலகிருஷ்ணன் அய்யா இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு பணிகளை செய்து கொண்டு உள்ளோம் என்றார்கள். பாலகிருஷ்ணன் அய்யா அவர்கள் தான் எங்களுக்கு ஜீவகாருண்யத்தின் நற்பயனை சொல்லிக் கொடுத்து நல்ல வழியைக் காட்டி உள்ளார் என்பதனை அத்தனை பேரும் ஒத்த கருத்துடன் சொன்னார்கள். நான் வியந்து போனேன்.

அந்த கருணையே வடிவமாக உள்ள திரு. பாலகிருஷ்ணன் அய்யாவின் உண்மை, நேர்மை, ஒழுக்கம், இரக்கம், தயவை, அன்பை, சேவதாரிகள் மூலமாக தெரிந்து ஆச்சரியமும் வியப்பும் அடைந்தேன். நான் இதுவரையில் வள்ளலாரை கனவில் கூட கண்டதில்லை. அன்று தீப அறக்கட்டளை சேவதாரிகள் அத்தனை பேரும் என் கண்களுக்கு வள்ளலார் போல் தோன்றினார்கள். அன்றுதான் பல உருவங்களில் வள்ளலார் காட்சி கொடுத்ததை நேரே கண்டேன். என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. அருட்பெரும்ஜோதி ஆண்டவர் முன்னால் கண்ணீர் விட்டு கதறி அழுதேன். என்னே "அருள் அற்புதம்" இறைவா.

அற்புதம் அற்புதம் அருள் அற்புதமே.

அந்த சிறிய தீப அறக்கட்டளை இல்லத்தில் அளவு கடந்த ஜீவகாருண்ய பணிகளை அருட்பெரும்ஜோதி ஆண்டவர் தோன்றும் துணையாக இருந்து செயலாற்றிக் கொண்டு வருகிறார் என்பதை உணர்ந்தேன்.

தீப அறக்கட்டளையின் ஜீவகாருண்ய பணி தொய்வு இல்லாமல் மேலும் மேலும் விரிவடைய புதியதாக விரிவான சொந்த இடத்திற்கு கருணை பாலிக்க வேண்டுமாய் அருட்பெரும்ஜோதி ஆண்டவரை வேண்டிக் கொண்டேன்.

திரு. பாலகிருஷ்ணன் அய்யாவைக் கண்டேன். அவர் அன்பிற்கு அளவே இல்லை. சொல்லவே வேண்டியதில்லை. அவர் கருணையே வடிவமாக திகழ்கின்றார். தன்னை வெளியே காட்டிக் கொள்ளாமல் அதிகம் பேசாமல், மேடையில் ஏறாமல் மிகவும் அடக்கத்துடன், அன்புடன், தயவுடன், கருணையுடன் மவுன புரட்சி செய்து கொண்டு உள்ளார்.

இவ்வளவு ஜீவகாருண்ய பணிகளை இவரால் எப்படி செய்ய முடிகிறது என்பதை நினைத்தால் ஆச்சரியமாக உள்ளது. வியந்து வியந்து பாராட்டுகிறேன். ஆதரவு அற்றவர்களுக்கு உணவு, உடை, பொருள். கண் இல்லாதவர்களுக்கு அவர்கள் வாழ்க்கைக்கு தகுந்தாற்போல் சிறிய வியாபாரம் செய்ய பொருள் உதவி. மேலும் ஏழை மாணவ மாணவிகளுக்கு மேற் படிப்பிற்கான பண உதவி.

புறத்தியல் கடைமுதல் புணர்ப்பால் புறத்துறும்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (540)

முதியவர்களுக்கு உணவு உடை தினமும் உணவுக்கு வேண்டிய பொருள்கள். ஏழைகள், குழந்தைகள், முதியவர்கள், பசியோடு எங்கு எங்கு உள்ளார்கள் என்பதை அறிந்து வேன் மூலமாக உணவு கொண்டு சென்று நேரே உணவு வழங்குவது.

குளிர் காலங்களில் ரோட்டிலே தவிக்கும் முதியவர்களுக்கு போர்வை வழங்குதல் போன்ற எண்ணற்ற ஜீவகாருண்ய பணிகளை, தீபம் அறக்கட்டளை மூலமாக கருணைமிகு பாலகிருஷ்ணன் அய்யா அவர்கள் சேவதாரிகளின் துணையோடு உதவியோடு செயல்பட்டுக் கொண்டு உள்ளது பெரும் வியப்பை அளிக்கிறது. தீபம் அறக்கட்டளையில் அருட்பெரும்ஜோதி ஆண்டவர் அமர்ந்து செயலாற்றிக் கொண்டு உள்ளார் அதுதான் உண்மை. விழாவில் எந்த சலசலப்பும் இல்லாமல் அவ்வளவு நேர்த்தியாக சிறப்பாக நடைபெற்றது.

எங்கே கருணை இயற்கையில் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெரும்ஜோதி.

என்ற வள்ளலார் வாக்குக்கு பாத்திரமாக தீபம் அறக்கட்டளை விளங்கி கொண்டு உள்ளது. பாராட்ட வார்த்தைகளே இல்லை.

மேலும் திரு, சதுரகிரியார் அவர்கள் எல்லாப் பணிகளையும் சிரமேற் கொண்டு சுமைதாங்கிபோல் பம்பரம் போல் சுற்றி சுற்றி மின்னல் வேகத்தில் பணிகளை செய்து கொண்டு இருந்தார், அவருக்கு நிகர் அவர்தான், அந்த அன்பு உள்ளத்தை எவ்வளவு பாராட்டினாலும் அருட்பெரும்ஜோதி ஆண்டவர் ஏற்றுக் கொள்வார். மேலும் எனது இனிய தோழர் கருணை கோவிந்தசாமி அய்யா அவர்கள் தீபம் அறக்கட்டளையில் தங்கி நல்ல கண்காணிப்பாளராக, நல்ல ஆலோசகராக செயல்பட்டுக் கொண்டு இருப்பது அளவில்லா ஆனந்தம். மேலும் தீபம் அறக்கட்டளையின் வளர்ச்சியில் பங்கு கொண்டு வாரி வாரி வழங்கும் வள்ளல்கள் சான்றோர்கள் நிறைந்து உள்ளார்கள்.

அந்த கருணை உள்ளங்களால் ஜீவ காருண்ய பணி சிறப்புடன் செயலாற்றிக் கொண்டு வருகின்றது. தீபம் அறக்கட்டளை தொய்வு இல்லாமல் உலகம் போற்றும் அளவுக்கு வளர்ச்சி அடைந்து வருகின்றது. என்றால் கருணை உள்ள வள்ளல்கள் தான் காரணம். அவர்களை நான் வணங்கும் அருட்பெரும்ஜோதியாக கண்டேன். அந்த தெய்வங்கள் கொடுக்கும் கருணை உள்ள உள்ளங்களுக்கு அருட்பெரும்ஜோதி ஆண்டவர் அருளை வாரி வாரி வழங்குவார் இது சத்தியம்.

அவர்களுக்கு நீண்ட ஆயுள், நிறைந்த செல்வம், அழியாப் புகழ், என்றும் அழியாத அருளைக் கொடுத்து மரணம் இல்லாப் பெருவாழ்வில் வாழ வைக்க வேண்டும் என்று அருட்பெரும்ஜோதி ஆண்டவர் இடத்தில் வேண்டிக் கொள்கிறேன். தலைவணங்கி பிரார்த்தனை செய்ய கடமைப்பட்டு உள்ளேன்.

குறுகிய காலத்தில் தீபம் அறக்கட்டளை ஒரு சகாப்தமாக விளங்கிக் கொண்டு வருகின்றது. மேலும் மேலும் பட்டினி இல்லா உலகத்தை உருவாக்க ஒவ்வொரு சன்மார்க்கிகளும், சன்மார்க்க சங்கங்களும் தீபம் அறக்கட்டளைப் போல் செயல்பட உறுதியை மேற்கொள்வோம்.

உண்மை, நேர்மை, ஒழுக்கம், இரக்கம் இருந்தால் போதும். கடவுள் நிச்சயம் காரியப்படுவார். எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே எல்லாம் வல்லான் தனையே ஏத்து!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லாநெறியே உலகம் எல்லாம் ஓங்குக!

நிதியே என்னுள் நிறைவே பொதுவில் நிறைந்த
சிவபதியே அருட்பெருஞ் சோதிய னேஅம்
பலம்விளங்கும்கதியே என்கண்ணும் கருத்தும்
களிக்கக் கலந்துகொண்ட
மதியே அமுத மழையேநின் பேரருள் வாழியவே
வாழி என்ஆண்டவன் வாழி எங்கோன்
அருள் வாய்மை
என்றும் வாழி எம்மான் புகழ் வாழிஎன் நாதன்
மலர்ப்பதங்கள் வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப்
பெருநெறி மாண்புகொண்டு வாழிஇவ் வையமும்
வானமும் மற்றவும் வாழியவே!

அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
98659 39896.

**அகப்புறக் கடைமுதல் அணைவால் அக்கணம்**
**அகத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (542)**



## நன்றி! நன்றி!! நன்றி!!!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவிற்கு பொருளை அருளாக மாற்றிய தயவாளர்களுக்கும், நிதியை மதியாக மாற்றிய ஈரநெஞ்சினர்களுக்கும் விழாவிற்காக மூன்று நாட்கள் இரவு-பகலாக உடலாலும், உள்ளத்தாலும் உடலுழைப்பை நல்கிய ஆடுகின்ற சேவடிகளுக்கும் தீபம் அறக்கட்டளையின் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

## நன்றி! நன்றி!! நன்றி!!!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவிற்கு 2டன் அரிசியும், 15 டின் எண்ணெய்யும் மற்றும் நிதியும் திரட்டி தந்த வேளச்சேரி ஜிதேந்திரா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் தயவு உத்தம்சந்த் ஜெயின் அவர்களுக்கும் மற்றும் வேளச்சேரி பகுதி வாழ் ஜெயின் சமுதாய பெருமக்களுக்கும் தீபம் அறக்கட்டளையின் கோடானுகோடி நன்றி!



தயவுமிகு
உத்தம்சந்த் ஜெயின்



தயவுமிகு
எம். குமரேசன்

## நன்றி! நன்றி!! நன்றி!!!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவிற்கு பல டன் காய்கறிகளையும் மற்றும் வாழை இலையும் கிள்ளித்தராமல் அள்ளி குவித்த வேளச்சேரி தயவுமிகு எம். குமரேசன் அவர்களுக்கு தீபம் அறக்கட்டளையின் சார்பில் கோடானுகோடி நன்றி!

**அகக்கடைமுதல் புணர்ப்பு அதனால் அகக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி (544)**

# சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழா துளிகள்...

















**வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்**
**ஆனற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (546)**

# சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழா அன்னதானத் துளிகள்...















நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்ஜோதி (548)

## 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவில்
## 10000 அன்பர்களுக்கு வழங்க தயாராகும் அன்னதானக் காட்சிகள்...







**நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மேல் உயிர்ப்பும்**
**ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (550)**

# 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவிற்கு இரவு முழுவதும் தூங்காமல் 4000 லட்டுகளும், காரமும் தயார் செய்யும் சேவடிகள்







**புனல்மேல் புவியும் புவிமேல் புடைப்பும்**
**அனல்மேல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (552)**

## 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவில் அதிகாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் திரண்ட கூட்டமும், அருட்பா இன்னிசையும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும்








**பகுதிவான் வெளியில் படர்ந்தமா பூத**
**அகல்வெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி (554)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

## திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

35. ஞானயோ காந்த நடத்திரு வெளியெனும்

36. ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) யோகம் என்றால் கூடுதல் அல்லது ஒன்றுதல் எனப் பொருள்படும். ஞானத்தால் உண்மையைக் கண்டு உள்ளொன்றுதல் ஞானயோகமாக நவிலப்படும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றில் ஈற்றிலுள்ளது ஞானம். இந்த ஞானத்திலும், சரிபாதி நான்கு நிலையுளவாம். ஞானத்தில் ஞானமாகவுள்ள முடிநிலையே கடவுள் மயமான பெருநிலையாகும். இம்முடிவு நிலையை எய்துவதற்கு முன்னுள்ள சுத்த விசார நன்னிலையே ஞானத்தில் யோகநிலை எனலாகும். இந்த ஞானயோக அந்தத் தேதான் நம் அருட்பெருஞ்ஜோதி நடனபதி, ஆனியில், அதாவது கேடும் அழிவும் அற்ற ஆன்ம சிற் சபையில் திருநடனம் புரிந்து கொண்டுள்ளார். நமது அருட்பெருஞ் ஜோதி ஆனந்த நடனபதி திரு நடனம் புரிந்து கொண்டுள்ள அருளம்பலம் எவராலும், எதனாலும் தீண்டப்படாத அகவெளியிலுள்ளதாம். அப்படியானால் அந்த நடராஜபதியை ஒருவன் ஞானயோகத்தால் கண்டு ஒன்றுவது எப்படி முடியும்? ஞானயோகத்தால் முடியாதுதான்! இங்கு அந்த ஞானயோகத்தால் அப்பதிநிலை சித்திப்பதாக்ச சொல்லவில்லையே நம் வள்ளற் பெருமான்! ஞானயோகத்தின் அந்தத்தே, அப்பாலே, அதீதத்திலேயல்லவா நம் அம்பலத்தரசர் ஆடிக் கொண்டுள்ளார் எனக் குறித்திருக்கின்றார். எனவே, ஞான யோகாந்தத்தே விளங்கும் பதிநிலையை ஒன்றுவதற்குப் புறத்திருந்து சென்றடைதல் கூடாதாம். ஆகையால், சுத்த அருள் ஞானத்தால், நாமே அந்தப் பதியோடு இரண்டற இருக்கும் உண்மையையோர்ந்து, அங்கு உடனின்று வாழக்கூடும் என்பது குறிப்பு. இதுகாறும் சுத்தசன்மார்க்கம் வெளிப்படாதிருந்ததால், ஞானயோகாந்தத்தே கடவுள் மயமான வாழ்வு சித்திக்காதிருந்தது. இப்பொழுது நம் வள்ளல் பெற்ற சுத்தசன்மார்க்கத்தால் அவ் யோகாந்தத்திலங்கும் பதியோடு ஒன்றி வாழ்தல் சாத்தியமாகின்றதாம்.


அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**திரு அருட்பிரகாச வள்ளல் பெருமான் வருவிக்கவுற்ற பெருநாளை முன்னிட்டு அக்டோபர் - 5 & 6-ம் தேதிகளில் அகில உலகம் தழுவிய**

**சமரச சுத்த சன்மார்க்க மாநாடு**

**இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை**

மாநாட்டிற்கு வருகை தரும் சன்மார்க்க சொந்தங்களுக்கு இரண்டு நாட்கள் இடைவிடாது தொடர் அன்னதானம் செய்யும் பொறுப்பை சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளைக்கு அளித்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் தயவு ISOஅண்ணாதுரை அவர்களுக்கும் மற்றும் ஈரோடு கதிர்வேலனார் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

மாநாட்டிற்கு வருகை தரும் நம் தந்தை வள்ளல்பிராணின் செல்லப்பிள்ளைகளுக்கு அறுசுவை உணவை தயார் செய்யும் சேவையை தீபம் ஏற்றுக் கொள்வதில் பெருமிதம் அடைகிறது. ஆன்மநேய சொந்தங்களை **தீபம் அறக்கட்டளை இருகரம் கூப்பி அன்புடன் வரவேற்கிறது.**


**உயிர்வெளி இடையே உரைக்கும் பகுதி**
**அயவெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி (556)**

# நித்ய தீப தருமச்சாலை

## கடந்த 10 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 17 தருமச்சாலைகள் மூலம்

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்! தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 17 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ.17, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,70,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

Bank / Branch : State Bank of India / IIT Branch
Current A/c. No. : 30265475129
IFSC : SBIN0001055

**உயிர்வெளி அதனை உணர்கலை வெளியில்**
**அயல் அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (558)**

## தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகள்

1. தினசரி காலை 17 தருமச்சாலைகள் மூலம் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்குக் கஞ்சி வார்த்தல் நடைபெற்று வருகிறது.
2. தினசரி மதியம் நித்ய தீப தருமச்சாலை மற்றும் நடமாடும் தருமச்சாலை மூலம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல் நடைபெற்று வருகிறது.
3. மாதந்தோறும் வறுமையால் வாடும் பார்வையற்ற குடும்பங்களுக்கு அரிசி, மற்றும் மளிகைப் பொருட்கள் ஆயுட்கால வாழ்வாதார உதவியாக கடந்த ஆறு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.
4. மாதந்தோறும் சைதாப்பேட்டை சன்மார்க்க சங்கம், வேளச்சேரி தண்டீஸ்வரம் ஆலயம் உள்பட மதியம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு அறுசுவை உணவுடன் பசியாற்றுதல் நடைபெற்று வருகிறது.
5. மாதந்தோறும் நோயினால் வருந்தி, வறுமையால் வாடும் டயாலிஸிஸ் சிகிச்சைக்காக ஆயுட்கால உதவியாக பலருக்கு கடந்த ஐந்தாண்டுகளாக மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.
6. ஆண்டுதோறும் வறுமையால் வாடும் கிராமப்புற மாணவர்களின் (நன்றாக தேர்ச்சி பெற்ற) எதிர்கால வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படிப்புக்காக பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி உதவி வழங்கப்பட்டு வருகிறது.
7. மாதந்தோறும் வடலூர் சத்திய தர்மச்சாலையில் பூச நன்னாளில் 46 மாதங்களாக தீபத்தின் தன்னார்வத் தொண்டர்களும், சேவடிகளும் பங்கு பெற்று சமையல் மற்றும் பசியறாற்றுவிக்கும் சேவையும் செய்து வருகிறார்கள்.
8. மாதந்தோறும் பூச நன்னாளில் வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் இரவு 8.00 மணியளவில் ஆறு திரை நீக்கி ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது.
9. வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் பொருட்டு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் மற்றும் கூட்டு வழிபாடு 173 வாரங்களாக நடைபெறுகிறது.
10. விரைவில் மேலும் 12 தருமச்சாலைகள் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் விரிவாக்கம் செய்ய எண்ணியுள்ளது.

---

# தீப நெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

## விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்

## தீபநெறி மாதஇதழ்


தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற / நிறுத்த முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு முகவரியை SMS / WhatsApp செய்யவும்.

**கலைவெளி அதனைக் கலப்பறு சுத்த**
**அலர்வெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி (560)**

## 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழாவில்
## ஜோதி வழிபாட்டில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தரிசனம்



தீபம் அறக்கட்டளையின் தலைமகனும், தவப்புதல்வனும்...



**சுத்தநல் வெளியைத் தூரிசறு பரவெளி**
**அத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி (562)**

சென்றமாத தொடர்ச்சி...

# நோய் - மருந்து

மருத்துவமனையிலிருந்து விடைபெறும்போது நோய் நீக்கப் பெற்றவர்க்கு, மருந்துகளின் பெயரும் அளவும், உணவுகளின் வகையும் – அளவும் குறித்து எழுதியே கொடுத்துவிடுகிறீர்கள். நன்று, நன்றி.

நோயாளிகளை உயிர்ப்பிக்கும் நீங்கள், அவர்கள் உயிர் வாழ்ந்திடவும் நிரந்தர சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதே எனது விண்ணப்பம்.

நீங்கள் தருகின்ற அறிவுரைகள்தான், அந்த நிரந்தர சிகிச்சை. அறிவுரைகளை ஏற்கும் தருணம் அதுதான். அறிவுரைகள் வழங்கிட ஏற்றவரும் நீங்கள்தான்.

உயிர்ப்பிக்கும் வல்லுநர்களே, வாழ்விக்கும் வள்ளல்களாகவும் நீங்கள் மாறிவிட்டால் நோய்கள் குறையும், வந்த நோயும் விரைந்து மறையும்.

நாங்கள் என்ன ஆன்மீகவாதிகளா? அறிவுரை ஆற்றிட, அறவுரை ஆற்றிட என்று மட்டும் மறுத்துவிடாதீர்கள்.

அன்பு எனும் மாமருந்து – அருமருந்துதான் ஆரோக்யத்தின் அடிப்படை இரகசியம் என்பதை உங்களை நாடிவரும் நோயாளிகட்கு வற்புறுத்திச் சொல்லிக் கொடுக்கத்தான் விண்ணப்பிக்கிறேன்.

பல்லுயிர் ஓம்புதல் சாதனை. நலிவுற்றோர் அத்தனை பேருக்கும் நன்மருத்துவம் கிடைப்பதுதான் அருஞ்சாதனை! செல்வந்தர் சிலருக்கு மட்டுமே கிடைத்திடும் உயர் சிகிச்சைகள் சாதனையே அல்ல – இல்லாதோர் படும் வேதனைகள் களையப்படல் வேண்டும்.

சில நோய்கள் தவிர்க்க முடியாதவை – தீர்க்கவே முடியாதவைகள் என்றும் கருதப்படுகின்றன.

பிறிதின் நோய் தன் நோயாக உணரும் சுற்றமும் – நட்பும் பெருகுமானால் – அன்புள்ளங்கள் சூழலில் அத்தகு நோய்கள் உணரப்படவே வாய்ப்பில்லாமல் போகும்.

நன் மருத்துவர் என்று புகழப்பட்டோர் – புகழப்படுவோர் அன்றும் இருந்தனர், இன்றும் இருக்கின்றனர்.

அவர்களிடம் காணப்பட்ட, காணப்படுகின்ற பொதுவான சிறப்பு அம்சம் – Healing Touch – எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்முகம், அன்பான விசாரணை, நம்பிக்கையூட்டிடும் நன்மொழிகள்.

ஐம்பது ஆண்டுகட்கு முன் பாரீஸ் நகரில் நடந்த ஓர் நிகழ்வு. தனது 95வது வயதில் ஒரு மூதாட்டி தனது இன்னுயிர் நீத்தார்.

தனது பணியாளராக இருந்த பெண்ணிடம் ஒரு தகவல் சொல்லி இருந்தாராம் அந்த மூதாட்டி.

தனது உயிர் பிரிந்த பின்பு, தனது அறையில், தனக்கு அருகே வெகு பத்திரமாக காத்து வந்த ஒரு பெட்டியை திறந்து பார்த்திட வேண்டும் என்பது தான் அந்த விருப்பம்.

அவர் விருப்பப்படியே, அவரது உறவினர்கள் பேரார்வத்துடன் குழுமினர். தன்னைப் பார்த்துக் கொண்ட தனது குடும்ப மருத்துவர் முன்னிலையில் தான் அந்தப் பெட்டி திறக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தாராம் அம்மூதாட்டி.

பேரார்வத்துடன் உறவினர் குழுமினர். குடும்ப மருத்துவரும் பெருத்த எதிர்பார்ப்புடன் பெட்டி திறப்புக்காக காத்திருந்தார்.

பணிப்பெண் பெட்டியைத் திறந்தாள். பெட்டி முழுக்க மருந்து குப்பிகள் – மாத்திரைகள் – தைலங்கள் என ஏகப்பட்ட மருந்துகள்.

ஏமாற்றத்துடன் ஒருவரையொருவர் பார்த்து விழித்து நிற்கையில் பணிப்பெண் பெட்டியின் அடிப்பாகத்திலிருந்து ஒரு கடித உறையை எடுத்துப் பிரித்தாள்.

மூதாட்டி கைப்பட எழுதிய மிகச் சிறிய குறிப்பு:

கடந்த 25 ஆண்டுகளாக சேகரித்த மருந்து. டாக்டரய்யா மன்னிக்குமாறு வேண்டுகிறேன். முழுமையாக அன்போடு என்னைப் பராமரித்த பணிப்பெண்ணுக்கு எனது உடமைகள் உரித்தாகுக.

அப்போதைய ஆங்கில இதழ் ஒன்றில் படித்ததைத்தான் இங்கு விவரித்தேன். நாம் பெறும் செய்தி யாது?

பிரதி எதிர்பாராத அன்புதான் மாமருந்து. பிணிகளோ பல – அவைகளை குணப்படுத்திட மனிதன் கண்ட முறைகளோ மிகப்பல.

யோகக்கலை, ஆயுர்வேதம் – சித்தவைத்தியம் – யூனானி – ஹோமியோபதி – நாட்டு வைத்தியம் – பாட்டி வைத்தியம் – உபவாசம்.

அருள் வடிவான மருந்து அற்புதமாக<br>
நம்முள்ளே அமர்ந்திருக்கும் மருந்து<br>
சஞ்சலம் தீர்க்கும் மருந்து<br>
இறப்பைத் தவிர்த்திடும் மருந்து<br>
நான் அதுவாகும் மருந்து<br>
நல்ல மருந்து சுகம் நல்கும் மருந்து – வள்ளலார்

ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்திடும் அரும் பண்பு இன்னும் பூரணமாக மலரவில்லை.

அனைத்து மாந்தரிடமும் இப்பண்பு இயல்பாகி விடுமானால்,

குற்றமேது? குறையேது? நோய் ஏது? மருந்து ஏது? சினமேது? சாவேது??

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை - 08056438488

**பரவெளி அதனைப் பரம்பர வெளியில்**
**அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (564)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் கலந்து கொண்ட அருளாளர்கள்.



அருளுரை வழங்கிய சைவமணியாரின் பல்வேறு முகத் தோற்றங்கள்



சட்டமன்ற உறுப்பினர் வாகை சந்திரசேகர் அவர்களின் வாழ்த்துரை.



ஈரோடு கதிர்வேலனாரின் எழுச்சி உரை



கங்கை மணிமாறன் பட்டிமன்றம்



திருப்போரூர் பாலசுப்ரமணியம் அய்யா



வில்லிசை வித்தகி பாரதி திருமகன்

RNI : TNTAM / 2010 / 35284 "REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT R.No.TN/CC(S)Dn/412/17-19
UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.
**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor :** M. Balakrishnan



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 10–ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவிற்கு வருகை தந்த ஆயிரக்கணக்கானோருக்கு பிரமாண்ட பந்தலில் நடந்த அறுசுவை அன்னதானம்.

நாள் : 10.09.2017

தீபம் அறக்கட்டளையின் அறங்காவலரும், அன்னதான செம்மலுமாகிய வேளச்சேரி ஜிதேந்திர டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் தயவுமிகு. **உத்தம்சந்த் ஜெயின்** அவர்களுக்கு பொன்னாடைப் போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி மகிழும் தருமச்சாலைகளின் தந்தை **சைவமணியார்**.



If undelivered Please Return to:

**DEEPAM TRUST**
(REDG. No. - 2035/07)
#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.in
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-9-2017
Egmore, Chennai - 8